Government of India

Press Information Bureau

International Year of Cooperatives 2025

Cooperatives Build a Better World

पत्र सूचना कार्यालय
PRESS INFORMATION BUREAU
भारत सरकार

# JIPMER Organised “JAI-HO” Walkathon as Part of ISATC–2026 to Promote Road Safety Awareness

Posted On: 08 FEB 2026 8:30PM by PIB Chennai

Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER), Puducherry, successfully organised the “JAI-HO – JIPMER Accident and Injuries Halting Objective” Walkathon on Sunday, 8th February 2026, at Pondicherry Rock Beach, as part of the International Summit on Advanced Trauma Care (ISATC–2026).




The walkathon was conducted as a key public awareness initiative under ISATC–2026, emphasising road safety, accident prevention, and injury reduction. The event aimed to highlight that trauma and road traffic injuries are largely preventable through responsible behaviour, timely intervention, and community participation.




The programme was inaugurated by Dr. Rachna Singh, Superintendent of Police, Puducherry, in the presence of Dr. Jagdish Menon, Professor, Department of Orthopaedics, JIPMER and Chairman; Dr. Deep Sharma, Professor, Department of Orthopaedics, JIPMER. In her address Dr. Rachna Singh, SP participated in the walkathon and addressed the gathering, stressing the importance of road safety awareness, strict adherence to traffic rules, and collective responsibility in preventing road traffic accidents and saving lives.

Faculty members, healthcare professionals, nursing staff, students, and members of the public actively participated in the walkathon, with a total of about 800 participants joining the event, demonstrating strong community engagement in JIPMER’s accident and injury prevention mission. The walkathon served as an effective platform to sensitise the public on safe road practices and highlighted the critical role of prevention in reducing trauma-related morbidity and mortality.

Students from Subiksham Academy also actively participated in the walkathon, adding vibrancy and enthusiasm to the event. As part of the awareness initiative, the students created and displayed theme-based posters highlighting key road safety messages, which effectively drew the attention of the public. Their creative efforts helped communicate important safety practices in a simple and impactful manner, reinforcing the need for responsible road behaviour. The active involvement of school students underscored the significance of educating the younger generation and engaging them as ambassadors of road safety in the community.

The JAI-HO initiative forms an integral component of ISATC–2026, reflecting JIPMER's comprehensive approach to trauma care that extends beyond hospital-based treatment to include injury prevention, public education, and community outreach. Through such initiatives, JIPMER continues to reinforce its commitment to improving public safety and strengthening trauma preparedness at the community level.

The walkathon concluded with a renewed call for sustained public participation in road safety initiatives, reinforcing the message that every accident prevented is a life protected.

Link: https://www.pib.gov.in/PressReleseDetail.aspx?PRID=2225195&reg=6&lang=1

Government of India
Press Information Bureau

International Year of Cooperatives 2025
Cooperatives Build a Better World

# ISATC–2026 ஜிப்மரில் “JAI-HO” சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடைப்பயணம்

प्रविष्टि तिथि: 08 FEB 2026 8:30PM by PIB Chennai

ஜவஹர்லால் முதுநிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (ஜிப்மர்), புதுச்சேரி, International Summit on Advanced Trauma Care (ISATC–2026) மாநாட்டின் ஒரு பகுதியாக, “JAI-HO – JIPMER Accident and Injuries Halting Objective” என்ற தலைப்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடைப்பயணத்தை 2026 பிப்ரவரி 8 (ஞாயிற்றுக்கிழமை) அன்று புதுச்சேரி ராக் கடற்கரை பகுதியில் நடத்தியது.




இந்த நடைப்பயணம் ISATC–2026 இன் முக்கிய பொதுவிழிப்புணர்வு முயற்சியாக நடத்தப்பட்டு, சாலை பாதுகாப்பு, விபத்து தடுப்பு மற்றும் காயம் குறைத்தல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தியது. பொறுப்பான நடத்தை, காலத்திற்கேற்ற தலையீடு மற்றும் சமூக பங்களிப்பு மூலம் விபத்துகள் மற்றும் சாலை போக்குவரத்து காயங்கள் பெரும்பாலும் தடுக்கக்கூடியவை என்பதை பொதுமக்களுக்கு உணர்த்துவதே இதன் நோக்கமாக இருந்தது.



இந்த நிகழ்ச்சியை புதுச்சேரி காவல் கண்காணிப்பாளர் டாக்டர் ரச்சனா சிங், காவல் கண்காணிப்பாளர் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் டாக்டர் ஜகதீஷ் மேனன், பேராசிரியர், எலும்பியல் துறை, டாக்டர் தீப் சர்மா, பேராசிரியர், எலும்பியல் துறை உட்பட பலர் கலந்துகொண்டனர்.

டாக்டர் ரச்சனா சிங் நடைப்பயணத்தில் கலந்து கொண்டு கூட்டத்தில் உரையாற்றியபோது, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு, போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்தல் மற்றும் சாலை விபத்துகளைத் தடுப்பதில் சமூகத்தின் கூட்டு பொறுப்பு ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தினார்.

ஜிப்மர் பேராசிரியர்கள், மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 800 பேர் இந்த நடைப்பயணத்தில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இது, விபத்து மற்றும் காயம் தடுப்பு முயற்சிகளில் ஜிப்மரின் நோக்கத்திற்கு சமூகத்தின் வலுவான பங்களிப்பை வெளிப்படுத்தியது. பாதுகாப்பான சாலை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதிலும், காயம் மற்றும் மரணங்களைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முக்கியம் என்பதை எடுத்துரைப்பதிலும் இந்த நடைப்பயணம் பயனுள்ளதாக அமைந்தது.

சுபிக்ஷம் அகாடமி மாணவர்களும் இந்த நடைப்பயணத்தில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கு சிறப்பை சேர்த்தனர். விழிப்புணர்வு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாணவர்கள் சாலை பாதுகாப்பை மையமாகக் கொண்ட கருப்பொருள் ஓவியங்கள் மற்றும் போஸ்டர்களை தயாரித்து காட்சிப்படுத்தினர். அவை பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து, முக்கியமான பாதுகாப்பு செய்திகளை எளிமையாகவும் தாக்கம் ஏற்படுத்தும் விதமாகவும் எடுத்துரைத்தன.

JAI-HO முயற்சி, ISATC–2026 இன் ஒரு முக்கிய அங்கமாக இருந்து, மருத்துவமனை அடிப்படையிலான மேம்பட்ட விபத்து சிகிச்சையைத் தாண்டி விபத்து தடுப்பு, பொதுவிழிப்புணர்வு மற்றும் சமூக அணுகல் ஆகியவற்றையும் உள்ளடக்கிய ஜிப்மரின் முழுமையான அணுகுமுறையை பிரதிபலிக்கிறது. இத்தகைய முயற்சிகள் மூலம், பொதுப் பாதுகாப்பை மேம்படுத்துவதிலும், சமூகத்தில் விபத்து எதிர்கொள்ளும் தயார்பாட்டை வலுப்படுத்துவதிலும் ஜிப்மர் தனது அர்ப்பணிப்பை தொடர்ந்து உறுதிப்படுத்தி வருகிறது.

இந்த நடைப்பயணம், சாலை பாதுகாப்பு முயற்சிகளில் பொதுமக்களின் தொடர்ந்த பங்களிப்பு அவசியம் என்பதை வலியுறுத்தியபடி, “தடுக்கப்படும் ஒவ்வொரு விபத்தும் காக்கப்படும் ஒரு உயிர்” என்ற வலுவான செய்தியுடன் நிறைவடைந்தது.

Link: https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2225198&reg=3&lang=2

இந்து தமிழ் திசை

# புதுச்சேரியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபயணம்

**புதுச்சேரி**

புதுச்சேரி ஜிப்மரில் விபத்துக் கால அவசர சிகிச்சை குறித்த சர்வதேச கருத்தரங்கம் அப்துல் கலாம் கலையரங்கத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இக்கருத்தரங்கை துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் தொடங்கி வைத்தார். இதன் ஒரு பகுதியாக ஜிப்மர் சார்பில் 'ஜெய் ஹோ விபத்து மற்றும் காயங்களைத் தடுக்கும் நோக்கம்' என்ற தலைப்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபயணம் நேற்று கடற்கரை சாலையில் நடைபெற்றது.

இந்த நடைபயணத்தை போலீஸ் எஸ்பி ரச்சனா சிங் தொடங்கி வைத்து பேசும் போது, "சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு, போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்தல் மற்றும் சாலை விபத்துகளை தடுப்பதில் சமூகத்தின் கூட்டு பொறுப்பு அவசியமானது" என்றார். இதில் ஜிப்மர் பேராசிரியர்கள், மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என சுமார் 800 பேர் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

விழிப்புணர்வு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மாணவர்கள் சாலை பாதுகாப்பை மையமாகக் கொண்ட கருப்பொருள் ஓவியங்கள் மற்றும் போஸ்டர்களை தயாரித்து காட்சிப்படுத்தினர். அவை பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து, முக்கியமான பாதுகாப்பு செய்திகளை எளிமையாகவும் தாக்கம் ஏற்படுத்தும் விதமாகவும் எடுத்துரைத்தன.

இந்த நடைப்பயணம், சாலை பாதுகாப்பு முயற்சிகளில் பொதுமக்களின் தொடர்ந்த பங்களிப்பு அவசியம் என்பதை வலியுறுத்தியபடி, தடுக்கப்படும் ஒவ்வொரு விபத்தும் காக்கப்படும் ஒரு உயிர் என்று அதிகாரிகள் தரப்பில் குறிப்பிட்டனர்.

தினத்தந்தி



# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபயணம்

புதுச்சேரி, பிப்.9-

கோரிமேடு ஜிப்மரில் விபத்து சிகிச்சை குறித்த சர்வதேச மாநாடு நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நடைபயணம் புதுவை கடற்கரை சாலையில் நேற்று காலை நடந்தது. இதனை போக்குவரத்து போலீஸ் சூப்பிரண்டு ரச்சனா சிங், போலீஸ் இன்ஸ்பெக்டர் நாகராஜன் ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர்.

இதில் ஜிப்மர் எலும்பியல் துறை பேராசிரியர்கள் ஜகதீஷ் மேனன், பசுபதி, இணை பேராசிரியர் பிரபு, நர்சிங் அலுவலர் ரபீஷ்குமார் மற்றும் பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள், செவிலியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காந்தி சிலை அருகே தொடங்கிய நடைபயணம் தலைமை செயலகம் வரை சென்று மீண்டும் காந்தி சிலை அருகே நிறைவு பெற்றது. சாலை பாதுகாப்பு, விபத்து தடுப்பு மற்றும் காயம் குறைத்தல் ஆகியவற்றின் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த நடைபயணம் நடைபெற்றது.

தினமலர்
புதுச்சேரி

# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு




புதுச்சேரி ஜிப்மர் சார்பில், கடற்கரை சாலையில் பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபயணத்தை எஸ்.பி., ரட்சனா சிங் துவக்கி வைத்தார்.

**புதுச்சேரி, பிப். 9–**

புதுச்சேரி ஜிப்மர் சார்பில், சாலை பாதுகாப்பை வலியுறுத்தி நேற்று காலை விழிப்புணர்வு நடைபயணம் நடந்தது.

நிகழ்ச்சியை எஸ்.பி., ரட்சனா சிங் துவக்கி வைத்தார். இன்ஸ்பெக்டர் நாகராஜன், எலும்பியல் துறை பேராசிரியிர்கள் ஜகதீஷ் மேனன், தீப் சர்மா, ஒருங்கிணைப்பாளர் ரபீஷ்குமார், எலும்பியல் துறை இணைப் பேராசிரியர்கள் பசுபதி, பிரபு,ஜிப்மர் பேராசிரியர்கள், மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சாலை பாதுகாப்பு, விபத்து தடுப்பு மற்றும் காயம் குறைத்தல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தி, பொறுப்பான நடத்தை, விபத்துகள் மற்றும் சாலை போக்குவரத்து காயங்கள் பெரும்பாலும் தடுக்கக் கூடியவை என்பதை பொதுமக்களுக்கு உணர்த்துவதற்காகவிழிப்புணர்வு நடைபயணம் நடந்தது.

காந்தி சிலை அருகே துவங்கிய நடைபயணம், 3 கிலோமீட்டர் துாரம் ஒயிட்டவுன் முழுதும் சுற்றி, மீண்டும் காந்தி சிலை அருகே முடிவடைந்தது.

தினகரன்

# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு போட்டி




புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை சார்பில் கடற்கரை சாலையில் நடந்த வாக்கத்தான் போட்டியை எஸ்பி ரச்சனாசிங் தொடங்கி வைத்து பங்கேற்றார்.

புதுச்சேரி, பிப். 9: புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை சார்பில் "ஜெய் ஹோ" சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு வாக்கத்தான் போட்டி நேற்று நடந்தது. இந்த நிகழ்ச்சியை வடக்கு- கிழக்கு போக்குவரத்து எஸ். பி. ரச்சனா சிங் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். எலும்பியல் துறை பேராசிரியர்கள் டாக்டர் ஜகதீஷ் மேனன், டாக்டர் தீப் சர்மா, நர்சிங் அலுவலர் ரபீஷ் குமார், இணை பேராசிரியர்கள் டாக்டர் பசுபதி, டாக்டர் பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

காந்தி சிலை அருகே துவங்கிய வாக்கத்தான் போட்டி, 3 கிலோமீட்டர் தூரம் ஒயிட்டவுன் முழுவதும் சுற்றி, மீண்டும் காந்தி சிலை அருகே முடிவடைந்தது. முன்னதாக எஸ்.பி. ரச்சனா சிங் பேசுகையில், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு, போக்குவரத்து விதிகளை கடைபிடித்தல் மற்றும் சாலை விபத்துகளைத் தடுப்பதில் சமூகத்தின் கூட்டு பொறுப்பு ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தினார். ஜிப்மர் பேராசிரியர்கள், மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 800 பேர் கலந்து கொண்டனர்.

தினமணி

திங்கள்கிழமை, 9 பிப்ரவரி 2026


# புதுச்சேரி ஜிப்மரில் பாதுகாப்பு விழிப்புணர்வு நடைப்பயணம்




புதுச்சேரியில் ஜிப்மர் சார்பில் கடற்கரை சாலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாதுகாப்பு விழிப்புணர்வு நடைப்பயணம்.

**புதுச்சேரி, பிப். 8:** புதுச்சேரியில் ஜிப்மர் சார்பில் பாதுகாப்பு விழிப்புணர்வு நடைப்பயணம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஜிப்மரில் மேம்பட்ட விபத்து சிகிச்சை குறித்த சர்வதேச மாநாடு கடந்த 4 ஆம் தேதி தொடங்கி ஞாயிற்றுக்கிழமை (பிப். 8) நிறைவடைந்தது. இதையொட்டி சாலை பாதுகாப்பு மற்றும் விபத்து தடுப்பு விழிப்புணர்வுத் திட்டம் நிகழாண்டு முழுவதும் நடைபெறுகிறது.

இதன் ஒரு பகுதியாக விழிப்புணர்வு பாதுகாப்பு நடைப்பயணம் நடைபெற்றது. புதுச்சேரி கடற்கரை காந்தி திடல் அருகே இந்த நடைப்பயணத்தை போக்குவரத்து காவல் கண்காணிப்பாளர் ரச்சனா சிங் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு, போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்தல் மற்றும் சாலை விபத்துகளைத் தடுப்பதில் சமூகத்தின் கூட்டு பொறுப்பு அவசியம்.

இந்த நடைப்பயணத்தில் ஜிப்மர் பேராசிரியர்கள், மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 800 பேர் கலந்து கொண்டனர். பாதுகாப்பான சாலை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதிலும், காயம் மற்றும் மரணங்களைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முக்கியம் என்பதை வலியுறுத்தி இந்த நடைப்பயணம் ஈடுபட்டது.

விழிப்புணர்வு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மாணவர்கள் சாலை பாதுகாப்பை மையமாகக் கொண்ட கருப்பொருள் ஓவியங்கள் மற்றும் பதாகைகளை தயாரித்துக் காட்சிப்படுத்தினர். அவை பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தன.

தமிழ் முரசு




புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை சார்பில் சாலை பாதுகாப்பை வலியுறுத்தி கடற்கரை சாலையில் வாக்கத்தான் போட்டி நடந்தது. இதை எஸ்பி. ரக்சனாசிங் தொடங்கி வைத்து பங்கேற்றார்.

# சாலை பாதுகாப்பு வாக்கத்தான் போட்டி

புதுச்சேரி, பிப். 8-

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை சார்பில் சாலை பாதுகாப்பு வலியுறுத்தி இன்று காலை வாக்கத்தான் போட்டி நடந்தது. இதில், கிழக்கு போக்குவரத்து இன்ஸ்பெக்டர் நாகராஜன் கலந்து கொண்டு சாலை பாதுகாப்பு குறித்து பேசினார்.

தொடர்ந்து, வடக்கு- கிழக்கு எஸ்பி. ரக்சனா சிங் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சாலை பாதுகாப்பு குறித்தும், போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தி, வாக்கத்தான் போட்டியை துவக்கி வைத்தார். காந்தி சிலை அருகே துவங்கிய வாக்கத்தான் போட்டி, 3 கிலோமீட்டர் தூரம் ஒயிட் டவுன் முழுவதும் சுற்றி, மீண்டும் காந்தி சிலை அருகே முடிவடைந்தது. இப்போட்டியில், பள்ளி, கல்லூரி மற்றும் ஜிப்மர் மருத்துவ மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.